# UNIT 2
# LESSON 3

# வேற்றுமை உருபு ‘கு’

- அன்பன் பள்ளிக்குப் பின்னால் உடற்பயிற்சிக்கூடம் உள்ளது.

- பள்ளிக்குப் பக்கத்தில் ஓர் உணவகம் உள்ளது.

பள்ளிக்கு = பள்ளி + கு

‘கு’ → வேற்றுமை உருபு


‘கு’ வேற்றுமை உருபு
முன்னால்
பின்னால்
பக்கத்தில்
நடுவில்
தொலைவில்

(எ – டு)

பள்ளிக்கு முன்னால்

வீட்டுக்கு முன்னால்

மேசைக்குப் பின்னால்

சந்தைக்குப் பக்கத்தில்

# பயிற்சி

மாணவர்கள் கொடி முன்னால் நிற்கிறார்கள்.

## விடை:

**மாணவர்கள் கொடிக்கு முன்னால் நிற்கிறார்கள்.**

அன்பன் <u>பள்ளி</u> பின்னால் உடற்பயிற்சிக் கூடம் உள்ளது

விடை:

அன்பன் பள்ளிக்குப் பின்னால் உடற்பயிற்சிக் கூடம் உள்ளது

அந்த மலை பக்கத்தில் ஒரு கரும்பு வயல் இருக்கிறது.

விடை:

அந்த மலைக்குப் பக்கத்தில் ஒரு கரும்பு வயல் இருக்கிறது.

தோட்டம் அருகில் ஓர் ஆறு ஓடுகிறது.

விடை:

தோட்டத்துக்கு அருகில்

ஓர் ஆறு ஓடுகிறது.

<u>அறை</u> நடுவில் சதுர மேசை இருக்கிறது.

விடை:

அறைக்கு நடுவில் சதுர மேசை இருக்கிறது.

பேரங்காடி எங்கள் <u>வீடு</u>
தொலைவில் இல்லை.

விடை:

பேரங்காடி எங்கள் வீட்டுக்குத் தொலைவில் இல்லை.